# அ.கி.பரந்தாமனாரின் வரலாற்றுப் பார்வை

# A.Ki. Paranthamanar’s Historical Perspective

*முனைவர் கு. கருமுருகானந்தராஜன்*
இணைப்பேராசிரியர்
கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்

**Dr. G. Karumuruganantharajan**
*Associate Professor*
*PSG College of Arts and Science*
*Coimbatore*

**Citation**: Karumuruganatharajan, G. “A.Ki. Paranthamanar’s Historical Perspective.” *Journal of Tamil Culture and Literature*, vol. 5, no. 1, 2025, pp. 21-26.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.19762136*

*ஆய்வுச் சுருக்கம்*

*பைந்தமிழ்ப் பாவலர் அ.கி.பரந்தாமனார், வரலாற்றுத் துறையில் ஆற்றியுள்ள பங்களிப்பினை மதிப்பீடு செய்வதாக இக்கட்டுரை அமையப் பெறுகிறது. இளம் வயது முதலே வரலாற்றுத்துறையில் அ.கி.ப., ஆர்வ முள்ளவராக விளங்கியுள்ளார். அ.கி.ப., சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் இளங்கலைப் படிப்பின்போது அரசியல் மற்றும் வரலாற்றுப் பாடங்களைச் சிறப்புப் பாடங்களாகக் கொண்டு பயின்றவர் ஆவார். “திராவிட இந்தியா”* (Dravidian India) *என்னும் புகழ்பெற்ற நூலின் ஆசிரியரான டி.ஆர். சேஷய்யங்காரும், பேராசிரியர் சி. ஸ்ரீனிவாசாச்சாரியாரும் அப்போது அவருக்கு ஆசிரியர்களாய் அமைந்தார்கள். அ.கி.ப., வின் “வரலாற்றுப் பற்றுணர்வு” அப் பேராசிரியர்களால் அவருக்கு ஏற்பட்டது எனக் கொள்ளலாம்.*

*வரலாற்று அறிவின் இன்றியமையாமையை அ.கி.ப., அறிந்திருந்தார். அ.கி.ப., இயற்றிய நூல்களில் அதற்கான அகச்சான்றுகள் கிடைக்கப் பெறுகின்றன. “தமிழிலக்கியம் கற்க” என்னும் நூலில் வரலாறு தெரிந்து இலக்கியம் படிப்பது அறிவியல் முறைக்கு ஏற்றது எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் வரலாறும் இலக்கியமும் இரட்டைச் சகோதரிகள். சங்க கால அரசியல் முறை அறிந்தால், எண்பேராயம், ஐம்பெருங்குழு இன்னவெனத் தெரிந்து கொள்ள முடியும். பிற்காலச் சோழர்களைப் பற்றித் தெரிந்தால்தான், கலிங்கத்துப்பரணி, மூவர் உலா இவை நன்கு விளங்கும். திருக்குறளில் கூறப்பட்டுள்ள நட்பு பொதுவாகக் காணப்படினும் அது அரசர் நட்புக்குக் கூறப்பட்டதெனச் சங்க வரலாற்றை அறிந்தார் நன்குணரலாம் என அ.கி.ப., குறிப்பிட்டுள்ளமை வரலாற்றுத் துறையில் அவர் காட்டிய விருப்புக்குச் சான்றாகும்*

***கலைச்சொற்கள்:*** *அ.கி.பரந்தாமணார், மதுரை நாயக்கர் வரலாறு, திருமலை நாயக்கர், வரலாற்றுப்பார்வை*

## Abstract

*This article aims to evaluate the contribution of the late Tamil scholar A.K. Paranthamanar to the field of history. A.K. has been interested in history since his youth. A.K. studied politics and history as special subjects during his undergraduate studies at Pachaiyappan College, Chennai. D.R. Seshayangar, the author of the famous book ‘Dravidian India’, and Professor C. Srinivasacharyar were his teachers at that time. It can be said that A.K.’s ‘historical passion’ was instilled in him by those professors. A.K.P. knew the importance of historical knowledge. Evidence for this is available in the books written by A.K.P. In his book ‘Learn Tamil Literature’, he has stated that studying literature with knowledge of history is suitable for the scientific method. He also stated that “History and literature are twin sisters. If you know the political system of the Sangam period, you can know about the Enperayam, Aim perunguzhu, etc. Only if you know about the later Cholas, you can understand Kalingathupbarani, Muvar Ula. Although the friendship mentioned in the Thirukkural is generally seen, those who know the history of the Sangam can understand it well.” A.K.P.*

***Keywords**: A.Ki.Paranthamanar, Madurai Nayak History, Thirumalai Nayak, Historical Perspective*

**அ.கி.ப.,வின் வரலாற்று நூல்கள்**

- *மதுரை நாயக்கர் வரலாறு*
- *திருமலை நாயக்கர் வரலாறு*
- *தலைசிறந்த பாண்டிய மன்னர்கள்*

**மதுரை நாயக்கர் வரலாறு**

*அ.கி.ப., மதுரைத் தியாகராசர் கல்லூரியில் பேராசிரியராய்ப் பணி செய்து கொண்டிருந்தக் காலத்தில் திரு. கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்களால் நடத்தப்பெற்று வந்த "தமிழ்நாடு" நாளிதழின் ஞாயிறு மலரில் மதுரை நாயக்கர்களின் வரலாற்றைத் தொடராக எழுதினார்.*

*அ.கி.ப.,வுக்கு முன்பே மதுரை நாயக்கர் வரலாற்றை சு. சத்தியநாத ஐயரவர்கள் சென்னைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவராய் இருந்தக் காலத்தில் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டுள்ளார். அந்த மதுரை நாயக்கர் வரலாறு ஆங்கிலத்தில் இருந்ததால் தமிழகத்தில் மதுரை நாயக்கர் வரலாறு நன்கு பரவவில்லை என்பது அ.கி.ப.,வின் கருத்தாகும். தமிழக வரலாற்றில் விடுபட்டிருப்பதும் தெளிவற்றிருப்பதும் விரிவாக இல்லாமலிருப்பதுமாகிய மதுரை நாயக்கர் வரலாற்றை, ஆங்கிலப் புலவர் கிப்பன் என்பார் இயற்றிய ரோம நாட்டு வரலாற்றைக் கருத்தில் கொண்டு தாம் இயற்றியதாக அ.கி.ப., "மதுரை நாயக்கர் வரலாறு" நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.*

*மதுரை நாயக்கர் வரலாறு நான்கு பதிப்பாக வெளியிடப்பட்டதைக் குறித்து கருத்துத் தெரிவிக்கும் மதுரைக் காமராசர் பல்கலைக்கழக வரலாற்றியல் பேராசிரியர் ப.சு. சந்திரபாபு வரலாற்றுப் பணியில் ஆசிரியரின் விடாமுயற்சியையும், புதுச் செய்திகளைச் சேகரிப்பதில் அவருக்கு இருந்த ஆர்வத்தையும் எந்த வரலாற்றாசிரியராலும் பாராட்டாமல் இருக்க முடியாது. 1974 இல் பிரசுரிக்கப்பட்ட பாளையக்காரர்கள் பற்றிய ராசய்யனார் புத்தகம் அவரால் கடைசியாகப் படித்துப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்கிறார். மேலும் தமிழகத்தில் எனக்குத் தெரிந்த வரையில்; இருபத்தொன்பது ஆண்டுகளாக ஒரே தலைப்பில் திருத்தியும் பல செய்திகளைச் சேர்த்தும் நான்கு பதிப்புகளாக வரலாற்றை எழுதிய ஆசிரியர் எவரும் இல்லை4 என்று குறிப்பிடுவதும் கவனத்திற்குரியதாகும்.*

**பதின்மூன்றாம் நூற்றாண்டில் தென்னாட்டு நிலைமை**

*மதுரை நாயக்கர் வரலாறு, பதின்மூன்றாம் நூற்றாண்டில் "தென்னாட்டு நிலைமை" என்னும் கட்டுரையோடு தொடங்குகிறது. மதுரை நாயக்கர்களின் ஆரம்ப காலமான பதினாறாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட சுமார் முந்நூறு ஆண்டு கால தென்னிந்திய அரசியல் நிலையை அக்கட்டுரை விளக்குகிறது. தென்னாட்டின் சிறப்புக்களைத் தெளிவாக விவரிக்கும் அ.கி.ப., அத்தகைய சிறப்புள்ள தென்னாட்டு வரலாற்றுடன் பின்னிப் பிணைந்து நிற்பது தென்மதுரை நாட்டை ஆட்சிபுரிந்த மாட்சிமிக்க மதுரை நாயக்கர் வரலாறாகும் என்று எடுத்துரைக்கிறார். நாயக்கர்களின் வரலாறே, கி.பி. 1365 ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1736 ஆம் ஆண்டு வரை தென்னகத்தின் வரலாறாக இருந்தமையை விளக்கியிருப்பது அந்நூல் எழுதப்பட்டதன் முக்கியத்துவத்தை புலப்படுத்துகிறது எனலாம்.*

**நான்கு பேரரசுகள்**

*மதுரை நாயக்கர் வரலாற்றைச் செம்மையாகப் புரிந்து கொள்ள பதின்மூன்றாம் நூற்றாண்டில் தென்னாட்டில் சிறந்து விளங்கிய யாதவப் பேரரசு, காகதீயப் பேரரசு, ஹொய்சளப் பேரரசு, பாண்டியப் பேரரசு ஆகியவற்றையும், தென்னாட்டில் முஸ்லீம் படையெடுப்பையும், விஜய நகரப் பேரரசையும் பற்றித் தெரிந்து கொண்டிருக்க வேண்டும் என வலியுறுத்தும் அ.கி.ப., அப் பேரரசுகள் பற்றிய குறிப்பினைத் தந்துள்ளமை முழுமையான வரலாற்று நூலினை இயற்றுவதில் அவருக்கு இருந்த பேரார்வத்தைப் புலப்படுத்துகிறது.*

*கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் தென்னாட்டு நிலையினை விளக்க முற்பட்ட அ.கி.ப., இத்தாலி நாட்டைச் சேர்ந்த மார்க்கோ போலோ, முஸ்லீம் வரலாற்றாசிரியன் வாசப் ஆகியோரின் பயணக் குறிப்புகளில் உள்ள செய்திகளையும் விரிவாக எடுத்துரைத்துள்ளார். மார்க்கோ போலோ கண்ட காலத்தில் காயல் தலைசிறந்த துறைமுக நகரமாய் இருந்தது. பலநாட்டு வணிகர்கள் காயலில் மிகுதியாய்த் தங்கி நலமுற வாணிகம் செய்தார்கள். சீன பாரசீகக் கப்பல்களும் கிழக்குத் துறைமுகங்களையே நாடி வந்தன. அரபி நாட்டிலிருந்து குதிரைகள் மிகுதியாய் இறக்குமதியாயின. பாண்டியர்கள் குதிரைகளுக்காக அளவிறந்த பொருளைச் செலவிட்டதாக மார்க்கோபோலோ குறிப்பிட்டுள்ளான். ஆண்டுதோறும் அரேபியா முதலிய நாடுகளிலிருந்து 10,000 குதிரைகள் காயலில் இறக்குமதியானதாக மற்றோர் அயல் நாட்டு வழிச் செலவினன் வாசப் கூறியிருக்கிறான். இவ்வாறு அடிக்கடி பாண்டியர்கள் குதிரைகள் வாங்கப் பெரும் பொருள் செலவிட்டதற்குக் காரணம், வாங்கிய குதிரைகள் அடிக்கடி கால் இடறிப் பயனற்றுப் போனதேயாகும்.*

*மேலும், அரபி நாட்டுக் குதிரை வணிகர்கள், குதிரைகளுக்கு லாடம் அடிக்க வேண்டும் என்பதைப் பாண்டியர்களுக்குக் கற்றுக் கொடுக்கவும் இல்லை. அவர்கள் கட்டுப்பாடாக, லாடம் அடிக்கும் தொழிலாளர்களைப் பாண்டியநாட்டுக்கு வராதவாறு பார்த்துக் கொண்டார்கள். இது அரபி வணிகர்கள் செய்த வாணிகத் தந்திரம். இவ்வாறு பாண்டியப் பேரரசைப் பற்றிய செய்திகள் அ.கி.ப.,வால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளமை அறியத்தக்கதாகும்.*

**தென்னகத்தில் முஸ்லீம் படையெடுப்பு**

*தென்னகத்தில் முஸ்லீம் படையெடுப்பினைப் பற்றிக் குறிப்பிடும் அ.கி.ப., ஒரு பெண்ணின் செருக்கே முஸ்லீம் படையெடுப்புத் தென்னகத்தில் நிகழ்வதற்குக் காரணமாயிற்று. ஜலாலுதீன் கில்ஜி என்ற டில்லி சுல்தான் தன் உடன்பிறந்தாள் மகனாகிய அல்லாவுதீனுக்கு தன் மகளைக் கடிமணம் செய்து கொடுத்தான். மகளோ செல்வச் செருக்கால் தன் கணவன் அல்லாவுதீனை ஒரு சிறிதும் மதியாது, அவனை இழிவாக நடத்தி வந்தாள்.*

*அல்லாவுதீன் தன் மனைவியின் செருக்கைஅடக்குவதற்குப் பெரும் பொருள் திரட்டி அப்பொருளின் உதவியால் எப்படியாவது அவள் தந்தையைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றுவதே ஏற்ற வழியாகும் என்று முடிவு கட்டினான். தென்னாட்டு மன்னர்களிடம் பெரும்பொருள் இருப்பதாய் அவன் முன்னரே கேள்விப் பட்டிருந்தான். ஆதலால் தென்னகத்தின் மீது படையெடுத்தான் என்று குறிப்பிட்டுள்ளமை நோக்கத்தக்கது. வரலாற்றின் மிக முக்கிய நிகழ்வினைக் கதை கூறும் பாணியில் மிக எளிமையாக எடுத்துரைக்கும் அ.கி.ப.,வின் திறம் வியத்தற்குரியதாகும்.*

**விஜய நகரப் பேரரசு வரலாறு**

*மதுரை நாயக்கர் வரலாறு, விஜய நகரப் பேரரசு வரலாற்றுடன் பின்னிப் பிணைந்து நிற்பதால் அப்பேரரசின் வரலாற்றை ஓரளவு அறிந்து கொள்வது இன்றியமையாததாகிறது எனக் குறிப்பிடும் அ.கி.ப., அழியும் நிலையில் இருந்த இந்து சமயத்தையும் தென்னாட்டு மக்களின் கலைப்பண்பையும் போற்றிப் பாதுகாத்தது விஜய நகரப் பேரரசு என்று அறுதியிட்டு உரைத்துள்ளமை அறியத் தக்கதாகும்.*

**தலைக்கோட்டைப் போர்**

*விஜயநகரப் பேரரசின் வரலாற்றில் முக்கியமானதாகக் கருதப்படும் தலைக்கோட்டைப் போரைப் பற்றி விளக்கும் அ.கி.ப., ''தலைக்கோட்டைப் போர்'' என்ற பெயர் பொருத்தமற்றது என்கிறார். இப்போரை சாதாரணமாக வரலாற்று ஆசிரியர்கள் தலைக்கோட்டைப் போர் என்றே குறிப்பிட்டிருக்கிறார்கள். வரலாற்றாசிரியர் சிலர் இதனை ராகூஷசி - தங்கடிப்போர் என்றும் கூறுவர். கிருஷ்ணையாற்றின் தென்கரையில் ராகூஷசி என்னும் சிற்றூரும், தங்கடி என்னும் சிற்றூரும் இருக்கின்றன. இவை ஒன்றுக்கொன்று பதினாறு கி.மீ. தொலைவில் உள்ளன. தலைக்கோட்டை என்னும் கோட்டை நகரமோ கிருஷ்ணையின் தென்கரையில் ஐம்பது கி.மீ. தொலைவில் இருக்கிறது. ஐம்பது கி.மீ. தொலைவில் உள்ள தலைக்கோட்டை என்னும் ஊரின் பெயரால் அப்போரை அழைப்பது பொருத்தமற்றது என்றாலும், இதைத் ''தலைக்கோட்டைப் போர்'' என்று கூறுவதே வழக்காற்றில் வந்துவிட்டது என வரலாற்றாசிரியர்களின் இரு வேறு கருத்தினைத் தெளிவுபடுத்தியிருப்பது அ.கி.ப.,வின் வரலாற்று உணர்வுக்குத் தக்க சான்றாகும்.*

**பாண்டிநாட்டில் விசுவநாதர் பரம்பரை**

*பாண்டிய நாட்டின் தொன்மை குறித்து எடுத்துரைக்கும் அ.கி.ப., சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த வீரப் பரம்பரை விழுந்தும் எழுந்தும் வாழ்ந்து முடிவில் பராக்கிரம பாண்டியனோடு மதுரையை விட்டு மறைந்தது. மிக்க புகழ் எய்திய பெரும் பெயர் மதுரையில் - தண்டமிழ் நாட்டு மதுரையில் - பரம்பரையாகத் தமிழ்ப் பாண்டியர் ஆண்டு வந்த பைந்தமிழ் மதுரையில், தெலுங்கர் பரம்பரை தொடர்ந்து நேரடி ஆட்சி நடத்தத் தொடங்கியது என்று வருத்தமுறக் குறிப்பிட்டிருப்பது அவரது இன உணர்ச்சியைப் புலப்படுத்துகிறது.*

**திருமலை நாயக்கர்**

*மதுரை நாயக்கர்களில் மிகவும் சிறப்பு வாய்;ந்தவராக அறியப்படும் திருமலை நாயக்கர் கி.பி. 1623 முதல் கி.பி. 1659 வரை மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்தியவராவார். அ.கி.ப., திருமலை நாயக்கரின் மீது பற்றும் அவர் வரலாற்றின் மீது ஆர்வமும் கொண்டவர் ஆவார். மதுரை நாயக்கர் வரலாறு என்னும் நூலினை வெளியிட்டவர், திருமலை நாயக்கர் வரலாறு என்று தனியாக ஒரு நூலினை எழுதியுள்ளமையே அதற்குச் சான்றாகும். திருமலைக்கு முன்னும் பின்னும் அறுவர் ஆட்சிபுரிந்தனர் எனினும் இவரே புகழ் வாய்ந்தவர் எனக் குறிப்பிடும் அ.கி.ப., திருமலை நாயக்கரின் பெருமைக்கு எது காரணம் என்பதையும் அறுதியிட்டுக் கூறியுள்ளார்.*

*மதுரை நாட்டை ஆண்ட பெருமைமிக்க திருமலை நாயக்கரை நாம் மறக்காததற்குக் காரணம், மதுரை நகரை அழகுள்ள கட்டடங்கள் கட்டியும், தெப்பக்குளம் வெட்டியும், புதுமண்டபம் எழுப்பியும் கலைநகராக்கியதே எனக் குறிப்பிடுவதிலிருந்து அ.கி.ப., திருமலை நாயக்கரின் மீது கொண்டு இருந்த ஈடுபாட்டினை அறிய முடிகிறது.*

**மதுரை தலைநகரமாகக் காரணம்**

*திருச்சியிலிருந்த நாயக்கர்களின் தலைநகரத்தைத் திருமலை மன்னர் 1634 இல் மதுரைக்கு மாற்றினார். திருமலை மன்னர் மண்டைச் சளி நோயால் அவதிப்பட்டு வந்தார். மீனாட்சி அருளால் அந்நோய் நீங்கியது. எனவே தலைநகரை மதுரைக்கு மாற்றினார் என்ற கதையினை எடுத்துரைக்கும் அ.கி.ப., நோய் நீங்கியது ஒரு காரணமாக இருந்திருக்குமே தவிர தலைநகரை மாற்றியதற்கு அது காரணமில்லைஎன்று மறுத்துரைக்கும் பான்மை அவர்தம் வரலாற்றுணர்வுக்குச் சான்றாகும்.*

*தலைநகரை மாற்றியதற்கு அரசியல் காரணங்கள் இருந்தது என்பதை அ.கி.ப., விளக்கியுள்ளார். தலைக்கோட்டைப் போரில் விஜயநகரப் பேரரசு சிதைந்து விட்டது. மூன்றாம் ஸ்ரீரங்கர் சிதைந்த பேரரசின் தலைவராய் இருந்தார். அவர் தமக்குக் கீழடங்கியவர்களை அடக்கியாண்டு கப்பம் கட்டுமாறு வற்புறுத்தினார். திருமலை நாயக்கரோ மூன்றாம் ஸ்ரீரங்கரிடம் இருந்து விடுபெற்று முழுவுரிமை மன்னராக ஆட்சிபுரிய எண்ணினார். ஆதலால், திரிசிரபுரம் தலைநகராய் இருந்தால் வேலூரிலிருந்து ஆட்சி செய்து வந்த மூன்றாம் ஸ்ரீரங்கர் திரிசிரபுரத்தை மிக எளிதாகத் தாக்கி வெற்றியடையக்கூடும். தலைநகரம் வீழ்ச்சியுற்றால் மதுரைநாட்டு ஆட்சியும் வீழ்ச்சியடையும் என்பதற்காகவும், மதுரை, நாட்டுக்கு மையமான இடத்தில் இருந்ததாலும் மதுரைக்குத் தன் தலைநகரை மாற்றினார். அதோடு தொன்மதுரை, பாண்டியர்களுக்குத் தலைநகராய் நெடுங்காலமாக இருந்து வந்தது. ஆதலால் திருமலை நாயக்கர் மதுரையைத் தலைநகரமாக்க எண்ணியிருக்கக் கூடும் என்று அ.கி.ப., விளக்கியுள்ளமை அவரது ஆழ்ந்த வரலாற்று அறிவுக்குச் சான்றாகும்.*

*திருமலை நாயக்கரின் இறப்பு குறித்த கதைகளை எடுத்துரைத்து அவற்றில் உண்மையில்லை எனவும் அவர் இயற்கையாகவே இறந்தார் என்றும் துணிந்து உரைப்பது அ.கி.ப.,வின் ஆய்வுக் கண்ணோட்டத்திற்குச் சான்றாகும். திருமலை நாயக்கரோடு ஐரோப்பியர்கள் மற்றும் கிறிஸ்தவப் பாதிரியார்களுக்கு இருந்த தொடர்பினைக் குறிப்பிட்டுத் திருமலை நாயக்கரின் சமயப் பொறையை மதிப்பீடு செய்துள்ளமை காணத்தக்கது.*

*திருமலை நாயக்கரின் அரும்பண்புகளைக் குறிப்பிடும் அ.கி.ப., திருமலை பெருவீரரல்லர் என்றும் வைரத்தைக் கொண்டு வைரத்தை அறுத்தவர் என்றும் விளக்கியுரைத்துள்ளார். திருமலை நாயக்கரின் குறைகளையும் நடுநிலையோடு எடுத்துரைக்கும் பான்மையை அ.கி.ப.,விடம் காணமுடிகிறது. திருமலைக்கு குறையே இல்லை என்று சொல்லிவிட முடியாது. சமய உணர்ச்சி மிக்க திருமலைக்கு, ஒரு செயலில் வெற்றிபெற வேண்டும் என்று தோன்றிவிட்டால், சமய உணர்ச்சியையும் நாட்டுப்பற்றையும் கொன்று எண்ணியதை எண்ணியவாறு திண்ணமாய் முடித்துக் காட்டும் இழிந்த மனப்பான்மையும் மாண்பிறந்த மான உணர்ச்சியும் மிகுந்திருந்தன எனக் காரண காரியத்தோடு ஒப்பிட்டுக் காட்டி திருமலை நாயக்கரை மதிப்பிட்டுரைப்பதிலிருந்து உண்மை அறியும் பண்பினை அ.கி.ப.,விடம் காண முடிகிறது எனலாம்.*

**முடிவுரை**

*தமிழ்ப் பேராசிரியர்கள் தமிழறிவோடு பிறதுறை சார்ந்த அறிவையும் பெற்றிருப்பது தமிழ் வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படும் என்பதை அறியமுடிகிறது.தமிழ்க்கல்விக்கு வரலாற்று அறிவின் தேவையை உணர்ந்தவராய் அ.கி.ப., திகழ்ந்துள்ளார்.மதுரை நாயக்கர் வரலாற்றை, ஆங்கிலப் புலவர் கிப்பன் என்பார் இயற்றிய ரோமநாட்டு வரலாற்றைக் கருத்தில் கொண்டு இயற்றியதாக அ.கி.ப., குறிப்பிட்டிருப்பது எண்ணத்தக்கது.சுமதுரை நாயக்கர் வரலாறு" என்னும் ஒரே தலைப்பில் இருபத்தொன்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து அ.கிப., கவனம் செலுத்தியுள்ளது அவரின் வரலாற்று உணர்வுக்குச் சான்றாகும். மதுரை நாயக்கர் வரலாற்றை எழுத அ.கி.ப.,*

*முப்பத்தைந்து நூல்களை ஆதாரமாகக் கொண்டுள்ளார். தென்னகத்தில் முஸ்லீம் படையெடுப்புக்குக் காரணம் ''ஒரு பெண்ணின் செருக்கே'' எனக் குறிப்பிடுவது வரலாற்றைச் சுவைபடச் சொல்லும் அ.கி.ப.,வின் திறனுக்குச் சான்றாகும். திருமலை நாயக்கர் தலைநகரைத் திருச்சியிலிருந்து மதுரைக்கு மாற்றியதற்கு அவருக்குக் கிடைத்த ''மீனாட்சியின் அருள்'' மட்டுமே காரணமில்லை; அதற்குச் சில அரசியல் காரணங்களும் இருந்தது என்பதை அ.கி.ப., எடுத்துரைத்துள்ளமை சிந்தனைக்குரியது. திருமலை நாயக்கர் புகழ் நிலைத்திருக்கக் காரணம் அவரது கலைப்பணியே என்பது அ.கி.ப.,வின் முடிவாகும்.*

*திருமலை நாயக்கர் பெருவீரர் அல்லர் என்றும், அவரிடம் மாண்பிறந்த மான உணர்ச்சி இருந்தது என்றும் குறிப்பிடுவது வரலாற்று ஆசிரியருக்குரிய ''நடுநிலைப் பண்பு'' அவரிடம் இருந்ததைத் தெளிவுறுத்துகிறது. வரலாறு, மன்னர்களை மட்டும் மையப்படுத்துவதாய் அமையாமல் மக்களையும் மையப்படுத்துவதாய் அமைய வேண்டும் என அ.கி.ப., கருதியமை மக்களின் சமூக வாழ்க்கையைப் பற்றி அவர் தொகுத்துள்ள செய்திகளின்வழிப் புலப்படுகிறது எனலாம்.*

**அடிக்குறிப்புக்கள்**

1. *அ.கி.பரந்தாமனார், தமிழ் இலக்கியம் கற்க, ப. 19.*
2. *அ.கி.பரந்தாமனார்., மதுரை நாயக்கர் வரலாறு, முகவுரை.*
3. *முனைவர் ப.சு. சந்திரபாபு, பல்துறை வித்தகர் அ.கி. பரந்தாமனார் (கட்டுரைத் தொகுப்பு), ப. 56.*
4. *அ.கி.பரந்தாமனார்., மதுரை நாயக்கர் வரலாறு, ப. 4.*
5. *அ.கி.பரந்தாமனார்., தலைசிறந்த பாண்டிய மன்னர்கள், ப. 21.*

**References**


1. A.Ki.Paranthamanar, Learn Tamil Literature, p. 19.
2. A.Ki.Paranthamanar, History of Madurai Nayaks, Preface.
3. Dr. P.Su. Chandrabahu, Multi-disciplinary Scholar A.Ki. Paranthamanar (Article Collection), p. 56.
4. A.Ki.Paranthamanar, History of Madurai Nayaks, p. 4.
5. A.Ki.Paranthamanar, Distinguished Pandya Kings, p. 21.